★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✭ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: புரட்டாசி 20உ வெள்ளி (5—10—56) ★ ★ வெளியூர்: புரட்டாசி 21உ சனி (6—10—56) [இதழ் 100

தொழிற் கட்சித் தலைமைக்குப் பெண் தேர்வு

★

பிளாக்பூல், அக். 4—

மிஸ் ஹெர்பிசன் நேற்று, பிரிட்டிஷ் தொழிற்கட்சியின் தலைவியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

இவர் ஒரு சுரங்கத் தொழிலாளியின் மகள்; முன்னர் பள்ளி ஆசிரியையாகப் பணியாற்றியவர். 1945-ல் பிரிட்டிஷ் தொழிற் கட்சி அபேட்சகராகப் போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அவருக்கு தற்போது வயது 49.

எழுத்தாளரான டாம் டிரைபெர்க் என்பார் துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இரயில் நிறுத்தம்: அக்டோபர் 15?

எல்லைக் கிளர்ச்சியில் புதிய கட்டம்

ம. பொ. சி.-யை மயக்கும் வித்தை பலிக்காது என்கின்றனர் தொண்டர்கள்

இரயில் நிறுத்தம் டில்லியின் கண் திறக்கும்

அக். அறப்போர் கருத்தலைகள்

(நமது அரசியல் நிருபர்)

அக்டோபர் 15-ந் தேதி தமிழரசுக் கழகம் அறப்போர் நடத்துவதாக அறிவித்து இருப்பது, காங்கிரஸ் வட்டாரத்திலும், காமராசர் ஆதரவாளர் கோஷ்டியிலும் பரபரப்பை உண்டாக்கிவிட்டதாகத் தெரிகிறது.

சட்டசபை முன்பு 'ஆர்ப்பாட்டம்' நடத்த வடக்கெல்லைக் கமிட்டி முடிவெடுத்து அறிவித்தபோதும், அதற்குத் தமிழரசுக் கழகம் ஆதரவு அளிக்க முன்வந்த போதும், 'ஒரு நாள் கூத்தாக' இது முடிந்துவிடும் என்றும், சிறை பிடிப்பது என்று ஆரம்பித்தால் 'உள்ளே போக' ஆட்கள் கிடைக்காமல் திண்டாடிப் போய், கிளர்ச்சிக்காரர், திட்டத்தைக் கைவிட்டு விடுவார்கள் என்றும் சர்க்கார் தரப்பில் கருதினர்.

ஆனால், ஆறு நாட்களில் 500 தொண்டர்கள் சிறை புக வந்தனர் — சர்க்கார் இது கண்டு, இது வெறும் சலசலப்பு என்று கருதினால் ஏமாற்றம் அடைவோம் என்று இப்போது எண்ணுவதாகத் தெரிகிறது.

பெரியார் துவக்கும் கிளர்ச்சியைக் காமராசர் தலையிட்டால் நிறுத்திவிட முடியும்; அதுபோலவே, ம. பொ. சி. ஆரம்பிக்கும் கிளர்ச்சியை நிதி மந்திரி சுப்பிரமணியம் தலையிட்டு நிறுத்திவிட முடியும் என்று காங்கிரஸ் வட்டாரத்தில் எண்ணிக் கொண்டிருந்தனர்.

அது முற்றிலும் பொய் என்பது இப்போது அவர்களுக்கே விளங்கிவிட்டதாகத் தெரிகிறது.

எனவே, அக்டோபர் 15-ல் 'அறப்போர்' நடைபெறுமானால் ஆயிரக் கணக்கில் சிறைப்பட நேரிடுமே, என்ன செய்வது? தேர்தல் நெருங்கி வரும் இந்த நேரத்தில் இப்படி ஒரு சங்கடத்தை உண்டாக்கிக் கொள்வதா என்று காங்கிரஸ் வட்டாரத்தில் பெருத்த கவலை மூண்டுவிட்டிருக்கிறது.

எந்த நியாயமான கிளர்ச்சியையும், எவ்வளவு நீதியுடன் நடத்தினாலும், கிளர்ச்சியில் கலந்திருப்பவர்கள் காங்கிரசுக்கு எதிர்க் கட்சிகளாக இருந்துவிட்டால், சுலபத்திலே, இது காங்கிரசின் எதிரிகளின் சூழ்ச்சி — தேர்தல் தந்திரம் என்று பழிசுமத்திவிடலாம் என்று காங்கிரஸ் அமைச்சர்கள் எண்ணுகிறார்கள்.

இதை அறிந்தே, திராவிட முன்னேற்றக் கழகம், இந்தக் கிளர்ச்சியில் நேரிடையாக ஈடுபடவில்லை—என்று கழக வட்டாரம் கூறுகிறது.

ம. பொ. சி., காமராசருக்குத் தொல்லை தருகிறார்; அது விரும்பத் தக்கதல்ல; எனவே இக்கிளர்ச்சியை ஆதரிக்க முடியாது—எதிர்த்தும் ஆக வேண்டும் என்று திராவிட கழகத்தில் கருத்து வளருவதாகத் தெரிகிறது.

அக்டோபர் 15-ல் அறப்போர் நடந்து ஆயிரக்கணக்கில் தொண்டர்கள் சிறைப்பட்டால், இராமர் பட எரிப்புக் கிளர்ச்சியினால் மக்கள் கவனத்தை இழுத்த நிலைமை மறைந்துபோய், ம. பொ. சி.-யின் அறப்போர்மீது மக்கள் கவனம் சென்றுவிடுமே— இதற்கு என்ன செய்வது என்றும் தி. க. வட்டாரத்தில் கவலை இருப்பதாக, அந்த வட்

(4-ம் பக்கம் பார்க்க)

அம்பேத்காரின் புதிய தேர்தல் திட்டம்

காங்கிரசுக்கு எதிராக கூட்டமைப்பு

புதுடில்லி, அக். 3—

"காங்கிரசுக்கு எதிராக எல்லா காங்கிரஸ் வாக்காளர்களையும் ஒரு தனிப்பட்ட நிறுவனத்தின்கீழ் ஒன்றுபடுத்த வேண்டியது மிகவும் அவசியமான — உடனடியாகச் செய்யவேண்டிய காரியமாகும்.

"பொதுத் தேர்தலில் காங்கிரசுக்கு எதிராகத் தாழ்ந்தப்பட்டோர் சம்மேளனத்தின் ஆதரவும் ஒத்துழைப்பும் பெற விரும்புவோருடன், சம்மேளனம் கலந்து பேசி முடிவு செய்ய விரும்பும்,"

என்று, டாக்டர் அம்பேத்கார், சம்மேளனத்தின் செயற்குழுக் கூட்டத்தில் கூறியிருக்கிறார்.

காங்கிரசுக்கு எதிராக உள்ள எல்லா அரசியல் கட்சிகளும் ஒன்றுபட வேண்டியதின் அவசியத்தையும் அவர் வற்புறுத்தினார்.

அகில இந்திய ரீதியில் பணியாற்ற ஓர் புதிய அரசியல் கட்சியை ஆரம்பிக்க டாக்டர் அம்பேத்கார் முனைந்துள்ளார். அந்தக் கட்சி 'இந்திய ரிபப்ளிக் கட்சி' என்ற பெயரில் செயல்படும் எனத் தெரிகிறது.

இதற்காகத் தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம், காங்கிரசுக்கு எதிராக உள்ள எல்லா கட்சிகளையும் கலந்து பேச ஒரு மாநாடு கூட்டுமெனத் தெரிகிறது.

அதே கூட்டத்தில், இந்திய வெளிநாட்டுக் கொள்கை, கோவா, காஷ்மீர், பாகிஸ்தான் விஷயத்தில் செயல்படவில்லை என்றும், பம்பாய் இருமொழி மாநில அமைப்பைக் கண்டித்தும், சூயஸ் கால்வாய் உபயோகிப்போர் சங்கத்தை ஆதரித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

'தென்னாடு புறக்கணிக்கப்படுகிறது'

'தமிழ்மொழி-பண்பாடு சிறந்து மிளிர தமிழ்நாடு தனிநாடாக வேண்டும்'

காந்தி பிறந்ததின விழாவில் முழக்கம்

திண்டுக்கல், அக். 5—

"எல்லோரும் சமமாக நடத்தப்பட வேண்டும் என்று காந்தியடிகள் கூறினார். ஆனால், இந்திய அரசாங்கம் தொழில் துறையில் தென்னாட்டைச் சமமாக நடத்தாமல் புறக்கணித்து வருகிறது. இது காந்தியடிகளின் கருத்திற்கு முற்றிலும் விரோதமான செயலாகும்,"

—என்று காந்தியடிகள் பிறந்த தின விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கருமுத்து சுந்தரம் அவர்கள் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில், மக்களுக்கு இன்னமும் சுதந்திரம் கிடைக்கவில்லை என்றும், காந்தியடிகள் விருப்பப்படி மொழிவழி மாநில அமைப்பு வேண்டும் என்றும், தமிழ் நாட்டில் இந்தி புகுத்துவதைக் கண்டித்தும், தமிழ் மொழியும், பண்பாடும் சிறந்து மிளிர வேண்டுமானால் தமிழ் நாடு தனியாகப் பிரியவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

காங்கிரஸ் தலைவர் சென்ற இரயில் நிறுத்தப்பட்டது!

தேபருக்குப் போலீஸ் பாதுகாப்பு

இந்திய காங்கிரஸ் தலைவர் தேபர் பரோடாவுக்குச் சென்று கொண்டிருந்த இரயில் வண்டியை மகாகுசராத் கோரிக்கையினர் மேமதிபாத் நிலயத்தில் நிறுத்தி, தங்கள் கோரிக்கையை வலியுறுத்தினர். வண்டி அரைமணி நேரம் நின்றது.

தேபர், 15 போலீஸ்காரர்களுடன் இரு போலீஸ் அதிகாரிகள் பாதுகாப்பளிக்க பரோடா சென்றார்.

இந்தியாவிலுள்ள தனி ஆலைகளில் அமைக்கப்பட்டுள்ள தறிகளின் மொத்த எண்ணிக்கை 1955 ஜனவரி மாதத்தில் 2,02,714 ஆக இருந்தது, 1956 ஜனவரியில் 2,02,901 ஆக உயர்ந்து விட்டது.

இந்தியருக்கு அநியாயம்!

நிற வெறியர்களுக்கு எச்சரிக்கை

இன மண்டலச் சட்டத்தை தடை செய்யக் கோரிக்கை

ஜோகனஸ்பர்க், அக். 4—

தென் ஆப்பிரிக்காவில் வாழும் பல்வேறு இனத்தவர்களும் தனித் தனி இடங்களில் வாழ வேண்டும் என இன மண்டலச் சட்டம் நிர்ப்பந்திக்கிறது. இதனால் அங்குள்ள இந்தியர்கள் வெளியேற்றப்பட்டு தொலைவில் உள்ள இடங்களுக்குக் குடியமர்த்தப்படுகிறார்கள். நகரங்களில் அவர்கள் தொழில் நடத்தவோ, சொத்துக்கள் வாங்கவோ உரிமை மறுக்கப்பட்டுள்ளது.

இதைக் கண்டித்துத் தொழிற் கட்சிப் பிரதிநிதிகள் பிரதமரைச் சந்திக்க விரும்பினர். ஆனால், பிரதமர் பேச மறுத்துவிட்டார்.

எனவே, உடனடியாக இன மண்டலச் சட்டத்தை அமுல் செய்வதை நிறுத்துமாறும், வெள்ளையரல்லாதாருக்கு வாழ உரிமை அளிக்க வேண்டுமென்றும் ஒரு பகிரங்கக் கடிதத்தின் மூலம் தென் ஆப்பிரிக்க அரசாங்கத்திற்கு தொழிற் கட்சித் தலைவரும், பார்லிமெண்டரி தொழிற் கட்சித் தலைவரும் கையொப்பமிட்டு தெரிவித்துள்ளார்கள்.

இந்திய சுதந்திரத்தின் அவலட்சணம்!

உரிமை முழக்கத்திற்குக் கிடைக்கும் பரிசு?

ஆமதாபாத், அக் 4—

மகாகுசராத் கோரிக்கையை இந்தியப் பிரதமருக்கு வலியுறுத்த பண்டித நேரு பேசிய பொதுக் கூட்டத்தில், மாணவர்கள் நடத்திய அறப்போர் கேவலமானது என்று ஆமதாபாத் பல்கலைக் கழகக் குழுக் கண்டித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தினால் பல்கலைக் கழகத்தின் கண்ணியத்துக்கே இழுக்கு ஏற்பட்டுவிட்டதாம். நற்பெயரைக் காப்பாற்ற மாணவர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு கல்லூரி அதிகாரிகளுக்குச் சிபாரிசு செய்துள்ளது என்றும் தெரிகிறது.

பண்டித நேருவை அவமானப்படுத்திவிட்டனராம்!

பந்த் குற்றம் சாட்டுகிறார்

புதுடில்லி, அக். 2—

காந்தியார் பிறந்த தினவிழாக் கூட்டத்தில் பேசுகையில் பண்டித பந்த், 'இந்தியா பெரிய நாடு; வேறு எந்த நாடும் இந்தியாவைப் பழிக்க விடமாட்டோம்' என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் பேசுகையில், 'மதத் தலைவர்கள்' என்ற புத்தகத்தைக்கொண்டு பாகிஸ்தான், பண்டித நேருவை அவமானப்படுத்தியிருப்பது அந்நாட்டின் கௌரவத்திற்கே இழுக்கானது என்று கூறியுள்ளார்.

தூத்துக்குடி படுகொலை:

மேலும் ஒரு பிச்சுவா கைப்பற்றப்பட்டது

தூத்துக்குடி, அக். 4—

இரண்டு தினங்களுக்கு முன் கைது செய்யப்பட்ட சித்திரவேலு தேவர் கொடுத்த வாக்கு மூலத்தின்படி, அவருடைய வீட்டிலிருந்து இரத்தக்கறை படிந்திருந்த ஒரு பிச்சுவாவும், குருதி பட்டிருந்த ஆடைகளும் போலீசாரால் கைப்பற்றப்பட்டிருக்கின்றன என்ற தகவல் ஏற்கனவே வெளிவந்திருக்கிறது.

மேலும் சித்திரவேலு தந்த தகவலின் மீது, மணிமுத்தாறில் உள்ள ஒரு வீட்டிலிருந்து மற்றும் ஒரு குருதிபடிந்த பிச்சுவா எடுக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 5—10—'56 வெள்ளி

பண்டிதரின் பதட்டம்

"உலகத்தில் பலரால் பெற்றிருக்க முடியாத அளவிற்கு, சொந்த மக்களின் பாராட்டையும் நன்மதிப்பையும் நான் பெற்று இருக்கிறேன்"

எனத் தன்னைத்தானே வெளிப்படையாகத் தற்பெருமையடித்துக்கொள்ளுகிற பிரதமர் நேருவிடம், மாற்றுக்கருத்தினரை மதித்து நடக்கும் மாண்பும், சினம் ஆறும் செவ்வியும் இயல்பாக அமைந்திருக்க வேண்டுவதுதான் சிறப்பாகும். மாற்றுக் கருத்தினரைக் குறித்து மாற்றுக்குறைவாகவும், பெருஞ்சினத்தைச் செயல்படும் துணையாகக்கொண்டு செயலாற்றும் சிறுமதியும், இந்தியப் பிரதமர் போன்று உலகச் சிறப்பெய்தி உள்ளவர்களிடம் அறவே இருத்தல் கூடாது. ஆனால், பண்டிதரிடம் நாம் காண்பது என்ன?

மாற்றுக் கருத்து என்றாலே பண்டிதரின் கண்கள் தீப்பிழம்பாகிவிடுகின்றன. அவரது உள்ளத்தையும் உடலையும் ஒரே நேரத்தில் சினம் இறுகத் தழுவிக்கொள்ளுகிறது. மூளைக் குழப்பம் ஏற்பட்டுவிடுகிறது. எதிர்ப்பவர்கள் மீது ஏசல் பாணத்தைத் தொடுக்கக் கிளம்பிவிடுகிறார். அதே நேரத்தில் தனக்குள்ள புகழ் பற்றியும், தன்னிடம் தஞ்சம் புகுந்துள்ள அதிகாரம் பற்றியும், அதற்குள்ளத் தீய பேராற்றல் பற்றியும் பாராட்டிப் பேசவும் அச்சுறுத்தி எச்சரிக்கவும் பண்டிதர் கிளம்பிவிடுகிறார்.

தானும் தவறு செய்யாதவர், தனது கையடக்கமாக உள்ள காங்கிரஸ் கட்சியும் தவறு செய்யும் தன்மையற்றது, தனது ஆட்சியும் மாசுமறுவற்றது என்றத் தனது திடநம்பிக்கையின் மீது நின்றுகொண்டு, மாற்றுக் கருத்துக்கள் அனைத்தும் மாசுடையன, அக்கருத்துக்களைத் தெரிவிப்போர் அனைவரும் மக்கள் நலம் நாடாத நாசகாலர்கள் எனக் கருதிக் கிடப்பதை, உயர்ந்த மக்களாட்சித் தத்துவம் எனப் பண்டிதர் மயங்கிக் கிடக்கிறார். அவ்வுணர்வு பாசிசத்தின் ஆணிவேர் என்பதை, அவர் அறிந்தும் அறியாதவர்போல் செயல்பட்டு வந்தாலும், நாட்டில் நல்லறிவாளர்கள் அறிந்தே இருக்கிறார்கள்.

தங்கள் கோரிக்கையே நூற்றுக்கு நூறும் நியாயமானது என நம்பி இருக்கும் மகா குசராத் கோரும மாணவர்களில் ஆயிரக்கணக்கானவர், குசராத் பல்கலைக் கழக வெளி அரங்கில் பிரதமர் நேரு போதனை புரிய வந்தகாலை, அவருக்கு எதிராக நின்று தங்கள் மகா குசராத் கோரிக்கையை முழங்கினர். கருப்புக் கொடி காட்டுவதின் மூலமும் இந்தியப் பேரரசின் இரு மொழி மாகாண அமைப்பு முடிவில் தங்களுக்குள்ள அதிருப்தியையும் வெளிப்படுத்திக் கொண்டுள்ளனர்.

இந்தியப் பிரதமரின் இன்றையக் கருத்துக்கு, மகாகுசராத் கோரிக்கை எதிரான கருத்தாக இருந்தபோதிலும், அக்கோரிக்கையில் இன்றளவும் பற்றுக்கொண்டு இருப்பது, மக்களாட்சிக் கோட்பாட்டிற்கு மாறுபட்டதல்ல. இனியும் அக்கருத்தைக் கொண்டிருப்பதும் சனநாயகப் பண்புக்கு முரண்பட்டதன்று.

அது போன்றே, தாங்கள் மனப்பூர்வமாக நம்பி இருக்கும் இலட்சியத்தை, நாடாளும் உரிமை பெற்றுள்ளப் பிரதமருக்கு அறிவுறுத்த, அவர் செவி இரண்டும் புகும்படி, அவ்விலட்சியத்தை அவர் முன் முழங்குவதும், மக்களாட்சி நடைமுறைக்கு உட்படாதது அன்று. தங்களுக்கு உடன்பாடில்லாத ஒன்றின் மீது தங்களுக்குள்ள மனம் நிறைந்த வேண்டாமையை வெளிப்படுத்திக்கொள்ள, தங்களுக்கு உடன்பாடில்லாத அத்தீமையைத் தங்கள் மீது திணித்தவர் காண, அவர் முன் கருப்புக்கொடி காட்டுவதும், மக்களாட்சி முறையில் ஒப்புக்கொள்ளப்படாத உரிமையன்று. ஆளவந்தார்களின் தவறுடைய நடத்தையை அவர்களுக்கு உணர்த்த, அமைதியான முறையில் சட்டத்திற்குட்பட்டு, தங்கள் கோட்பாட்டை முழக்கமிடுவதும், ஆளவந்தார்களின் போக்கில் உறைந்துள்ள அதிகார வெறியை அவர்களே உணரச் செய்ய கருப்புக்கொடி காட்டுவதும, சனநாயக பண்புக்கும், தனி உரிமைத் தத்துவத்திற்கும் ஒத்து இருப்பதேயாகும். இப்பேருண்மையை இந்தியப் பிரதமர், நம்மைவிடத் தெளிவாகத் தெரிந்திருப்பவரேயாவார்.

இருந்தாலும், மகா குசராத் கோரி முழக்கமிட்ட மாணவர்களை, கருப்புக் கொடி காட்டிய எதிர்கால ஆளவந்தார்களை, தாம் வீற்றுள்ள பொறுப்பான பிரதமர் பதவிக்கே களங்கம் ஏற்படும் வகையில், வசைபாடியுள்ளார். ஏசுவதில், பஞ்சமா பாதகங்களையும் மனமவிரும்பி செய்வதையே வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டிருக்கும் 'பெருந்தலை'யானையும மிஞ்சிவிட்டார்.

தம்மை மற்றவர் எப்பொழுதும் புகழ்ந்து கொண்டே இருக்கவேண்டும் என விழைபவர், அத்தகுப் புகழையே கேட்டுக் கேட்டு பூரித்துக் கிடப்பவர், எதிர்கால ஆக்கத்தினரைப் பார்த்து 'குரங்குகளே! காலிகளே! மிருகங்களே!' என அர்ச்சிக்கிறார்!

உலகப் புகழ் பெற்றவர்—ஊராள வந்தவர்—உலக சமாதானத்திற்காக உயிர் வைத்திருப்பதாகக் கூறிக் கொண்டிருப்பவர், தனது சொந்த நாட்டு மக்களைப் பார்த்து, 'குரங்குகளே! காலிகளே! மிருகங்களே!' என அழைக்கிறார்!

அவ்வாறு, நாட்டில் தங்களுக்கு எதிராக இருக்கும் மக்களைப் பார்த்து 'குரங்குகளே' எனக் கூப்பிட்டால், பிற நாட்டார் தம்மையும், 'குரங்குகள்' தலைவர் எனக் கேலி பேசக் கிளம்புவரே என்று எண்ணாது, பண்டிதர் பதட்டமாகப் பேசி இருக்கிறார்!

தமக்கு எதிர்ப்பு செய்யும் குசராத் பல்கலைக் கழக மாணவர்களைப் பார்த்து 'காலிகளே' என்றால், தம்மையும் காலிகள் தலைவர் என்று உள்ளூரக் கருத பிறநாட்டார் முந்துவரே என்பதை கருதிப் பார்க்கப் பண்டிதர் தவறிவிட்டார்!

'மிருகங்களே' என குசராத் மாணவர்களைச் சித்தரிப்பதின் மூலம், தம்மையும் அறியாமலேயே, 'மிருகேந்திரன்' நிலைக்குத் தம்மைத் தாழ்த்திக் கொண்டு இருக்கிறார், இந்தியப் பிரதமர் நேரு! ஐயோ! பாவம்!

காய்கறிகள், பழங்கள் பாழாகின்றனவாம்!

இந்தியாவின் இந்நிலைமைக்கு காரணம் என்ன?

புதுடில்லி, அக். 1—

இந்தியாவில் ஆண்டுதோறும் 1 கோடி டன்னுக்கு அதிகமாகவே பழங்களும் காய்கறிகளும் உற்பத்தியாகின்றன; இதில் 15 முதல் 20 சதவிகிதம் உற்பத்தியாகும் இடத்திலேயே பாழாகிறது. போதிய போக்குவரத்து வசதிகளும், சேமித்து வைக்கும் வசதிகளும் இல்லாததே முக்கியக் காரணம் வெளிநாடுகளில் குளிர் சேமிப்பு முறை ஓர் இயக்கமாகவே வளர்ந்துள்ளது.

மனித சக்தி சேகரிப்பு

புதிய அமைப்பு உருவாகிறது

பெங்களூர், அக். 1—

நாட்டில் கிடைக்கக்கூடிய மனித சக்தியைத் திரட்டுவதற்காக ஒரு நிர்வாகத் துறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது மத்திய அரசாங்க உள்நாட்டு இலாக்காவைச் சேர்ந்தது. அரசாங்கம்—தனிப்பட்டோர் நடத்தும் தொழில் துறைகளுக்குப் பயிற்சி பெற்ற ஆட்கள் கிடைப்பதற்கு இது வழி செய்யும்.

எதிர்காலத்தில் பல்வேறு திட்டங்களுக்காகப் பயிற்சி பெற்ற தொழில் நுணுக்க மேற்பார்வையாளர்கள் கிடைக்கச் செய்வதற்கே இந்த முயற்சி செய்யப்பட்டுள்ளதாம்.

இலங்கையிலிருந்து வெளியேறிய மலையாளிகள்

உதவியளிக்கக் கோருகின்றனர்

திருவனந்தபுரம், அக். 4—

இலங்கையிலிருந்து வெளியேறிய 45,000 மலையாளிகள் தங்களை 'அகதிகள்' எனக் கூறிக்கொண்டு, அவர்களுக்காக மாநில அரசாங்கத்தில் புனரமைப்புத் துறை ஒன்றை நிறுவி உதவி அளிக்குமாறு கேட்டு மனு ஒன்று சமர்ப்பித்துள்ளனர்.

45,000 மலையாளிகள் இலங்கையில் இருந்தனரென்றும், ஏறத்தாழ எல்லோருமே அங்கிருந்து வெளியேற்றப்பட்டு விட்டனரென்றும் கூறப்படுகிறது.

இலங்கை அரசாங்கம் எடுத்துக்கொள்ளுமாம்!

கொழும்பு, அக். 2—

தற்போது இலங்கையில் பிரிட்டிஷார் வசமிருக்கும் விமான கப்பல் படைத் தளங்களை இலங்கை அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் என்றும், அதற்கான முயற்சிகள் நடைபெற்று வருவதாகவும் இலங்கைப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

மிதக்கும் பொருட்காட்சி

ஜப்பான் நாட்டு இயந்திரத் தொழில், விவசாயச் சாதனங்களைக் கொண்ட பொருட்காட்சி ஒன்று கப்பலிலேயே அமைக்கப்பட்டு, தென்கிழக்கு ஆசியாவில் உள்ள எல்லாத் துறைமுகங்களுக்கும் கொண்டுவரப்படுமாம்.

'வடக்கேதான் நெசவுத் தொழில் இலாபகரமானது'

கோவை ஆலை முதலாளிகள் விளக்கம்

ஆச்சாரியா விநோபா பாவேக்கு ஏமாற்றம்?

கோவை, செப். 28—

கோவையிலுள்ள ஆலை முதலாளிகள் விநோபாவைச் சந்தித்தபோது, நன்கொடையாக வழங்கியுள்ள நிலங்களுக்கு ஆண்டுதோறும் ஒரு கோடி ரூபாய் தேவைப்படுகிறது என்றும், இந்தத் தொகையை கோவை ஆலை முதலாளிகள் நன்கொடையாக அளிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

கோவையில் 40 ஆலைகளில் சுமார் 10,00,000 நூல் சுழற்றிகள் உள்ளதைச் சுட்டிக் காட்டி, நூல் சுழற்றி ஒன்றுக்கு ரூ. 10 வீதம் நன்கொடை யளித்தால் ஒரு கோடி ரூபாய் சுலபமாகத்தரமுடியும் என்றும் அவர் விளக்கினார்.

இப்படி ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் வீதம் ஐந்து ஆண்டுகளுக்கு கோவை ஆலை முதலாளிகள் நன்கொடையளிக்க முன்வருவார்கள் என்று எதிர்பார்ப்பதாக விநோபா குறிப்பிட்டார்.

ஆனால், கோவை ஆலை முதலாளிகளின் பிரதிநிதிகள், நெசவுத் தொழில் பம்பாய், அலகாபாத் போன்ற வடக்கு நகரங்களில் முன்னேறியிருப்பதைப்போல கோவையில் இல்லையென்றும், பெரும்பாலும் கைத்தறியாளர்களுக்குத் தேவையான நூல் மட்டுமே ஆலைகளில் தயாரிக்கப்படுகிறது என்றும், ஆலை முதலாளிகளுக்குப் பெருத்த இலாபம் கிடைப்பதில்லை என்றும் எடுத்துக்காட்டி, விநோபா கேட்கும் ஒரு கோடி மிகவும் அதிகம் என்றும் எடுத்துரைத்துள்ளனர்.

இதுபற்றி முடிவான பதிலை அடுத்த மாதம் எல்லா ஆலை முதலாளிகளும் கலந்து பேசி அறிவிப்பதாகவும் கூறியுள்ளனர்.

இரு மொழி மாநில அமைப்புக்கு எதிர்ப்பு!

சட்டசபை முன் மறியல்; 420 பேர் கைது

பம்பாய், அக் 3—

சம்யுக்த மகாராட்டிர நிறுவனம், மகாகுசராத் நிறுவனம் ஆகியவற்றின் சார்பில், பம்பாய் மாநிலம் புதிய அமைப்பில் இரு மொழி மாநிலமாக அமைக்கப்படுவதைக் கண்டித்து சட்டசபை முன் ஆர்ப்பாட்டம் நடத்த முனைந்துள்ளனர்; போராட்டத்தில் 111 பெண்களும் கலந்துகொண்டனர் மொத்தம் 420 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆசாத் மைதானத்திலிருந்து புறப்பட்ட சம்யுக்த மகாராட்டிர சமிதியின் தொண்டர்கள் சிறு படைகளாகப் பிரிந்து போராட்டத்திற்குச் செல்லும்போது 200 போலீஸ் அதிகாரிகள் விரைந்து வந்து தொண்டர்களைக் கைது செய்து பாதுகாப்பில் வைத்தனர்.

மகாகுசராத் இயக்கத்தைச் சேர்ந்த 42 தொண்டர்களில் 27 பேர் கைது செய்யப்பட்டனர்.

சட்டசபை கட்டிடத்தைச் சுற்றிப் போலீஸ் பாதுகாப்பு இருந்தது; பஸ்கள், டிராம்கள் ஓடவில்லை.

தொண்டர்கள், 'எங்களுக்கு மகா குசராத் வேண்டும்' என்று பொறிக்கப்பட்ட தட்டிகளை ஏந்தி வந்தனர். அவர்களைப் போலீசார் கைது செய்தபோது கூடியிருந்த பொதுமக்கள் தொண்டர்களைப் பாராட்டி ஆரவாரம் செய்தனர்.

ஸ்டர்லிங் நிலுவை குறைந்துவருகிறது

புதுடில்லி, அக். 4—

தற்போது கிடைத்துள்ள புள்ளி விவரங்களைக்கொண்டு பார்க்கும்போது, இந்தியாவின் ஸ்டர்லிங் நிலுவை மேலும் குறைந்திருப்பதாகத் தெரிகிறது.

இந்த ஆண்டு துவக்கத்திலிருந்து இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக—வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி அதிகரித்து வருவதே இதற்கு முக்கியக் காரணமாகும்.

சென்ற மார்ச் மாதம் ஸ்டர்லிங் நிலுவைக்கு ரூ. 10 கோடி சேர்க்கப்பட்டது; அது படிப்படியாக ஒவ்வொரு மாதமும் குறைந்து கொண்டே வந்து, ஆகஸ்டு மாத முடிவில் நிலுவையில் 27 8 கோடி குறைந்துள்ளது.

ஏற்றுமதி மூலம் செப்டம்பரில் வெளிநாடுகள் 7199 கோடி இந்தியாவிற்குத் தரவேண்டியிருந்தது; அது ஆகஸ்டு மாதத்தில் 6316 கோடி ரூபாயாகக் குறைந்திருக்கிறது.

வெளிநாட்டு இறக்குமதி இந்திய அரசாங்கம் கட்டுப்பாடு விதிக்க வேண்டுமென்று கருதுகிறது

இந்த ஆண்டில், பொதுவாக விலைகள் உயர்ந்துகொண்டே போகிறது; இதற்கு முக்கியக் காரணம் பணப்பெருக்கமா, அல்லது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான பெரிய திட்டங்கள் நிர்மாணம் காரணமா என்று நிபுணர்கள் யோசித்து வருவதாகத் தெரிகிறது.

1955-ம் ஆண்டில், இந்தியா, பிரிட்டிஷ் கிழக்காப்பிரிக்காவுக்கு மொத்தம் ரூ 5,33,000 பெறுமான முள்ள சினிமாப் படங்களை ஏற்றுமதி செய்தது.

இதிலும் ஓரவஞ்சனை?

தகுதி — உபகாரச் சம்பளத்தில் சென்னைக்குக் கிடைக்கும் பங்கு

சென்னை, அக். 1—

பத்தாவது வகுப்புக்கு மேற்பட்டு படிக்கும் மாணவர்களின் தகுதிக்கு ஏற்றவாறு உபகாரச் சம்பளம் கொடுக்கும் திட்டம் ஒன்றை இந்திய அரசாங்கம் அறிவித்துள்ளது.

1956—57ல் இந்தியா முழுவதும் 400 மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் அளிக்கப்படுமாம். சென்னை மாநிலத்தில் 39 மாணவர்களுக்கு மட்டுமே இந்த உபகாரச் சம்பளம் தரப்படுமாம்.

மாணவர்கள் தங்கள் தகுதிகளைக் குறிப்பிட்டுக் கல்வி நிலையத்தின் தலைவர் மூலம் மனுச் செய்துகொள்ள வேண்டுமாம். இந்த உதவிச் சம்பளம் அளிப்பதற்குத் தகுதியையே அடிப்படையாகக் கொண்டு முடிவு செய்யப்படுமாம்.

நெய்வேலித் திட்டம்

ரூ. 4 கோடியில் இயந்திரங்கள்

சென்னை, அக். 1—

நெய்வேலி பழுப்பு நிலக்கரி எடுப்பதற்காக, பெரிய சாதனங்களுக்கு சென்னை அரசாங்கம் 'ஆர்டர்' கொடுத்துள்ளது இதற்கு முன் மண் அகற்றும் சாதனத்திற்காக ரூ. 1,57,00,000 செலவிடப்பட்டது. இப்போது வாங்க முடிவு செய்துள்ள சாதனங்களுக்கு ரூ. 4. கோடி செலவாகுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது.

மண் அகற்றும் வேலை 1957 முதல் மூன்று மாதங்கள் நடைபெறுமாம். கல்—மண் ஆகியவைகளை அகற்றும் சாதனம் 1958-ல் வந்து சேருமாம். தரைமட்டக் கணக்கெடுப்பு வேலைகள் முடிவடைந்துவிட்டதாம்.

இந்தச் சாதனங்களை இயக்கச் செய்ய சென்னை அரசாங்கம் 12,000 கிலோவாட் மின்சாரம் அளிக்குமாம்.

பூமியின் அடியிலுள்ள வெப்பத்தைக் கொண்டு இயங்கும் மின்சார நிலையம்

ரஷ்யாவில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன

ரஷ்ய விஞ்ஞானிகள் தற்பொழுது சக்தியியலின் வளர்ச்சியில் ஒரு புதிய ஆராய்ச்சியை மேற்கொண்டுள்ளனர்.

பூமியின் கீழ்ப்பாகத்திலுள்ள வெப்பத்தைக் கொண்டு, மின்சார சக்தியை உற்பத்தி செய்து, வெப்பத்தை உண்டாக்குவதற்கும் இதர வேலைகளுக்குப் பயன்படுத்துவதற்கும் இப்பொழுது முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

பூமியின் கீழுள்ள இயற்கையான நீராவியைப் பயன்படுத்தி, இயந்திரத் தொழில்களுக்கான மின்சாரத்தை உற்பத்தி செய்து கொடுக்கும் பரீட்சார்த்த நிலையம் ஒன்றை நிறுவுவதற்காக, ரஷ்ய விஞ்ஞானப் பேரவையின் ஆராய்ச்சிக் குழுவினர் முயற்சித்து வருகின்றனர். ரஷ்யாவிலேயே இத்தகைய மின்சார நிலையம் கட்டப்படுவது இது தான் முதல் தடவையாகும் என்று தெரியவருகிறது.

வெந்நீர் ஊற்றுக்கள்!

மத்திய ஆசியாவிலும், காகஸவிலும் வெந்நீர் ஊற்றுக்களைக் கண்டுபிடிப்பதற்கும், இது சம்பந்தமான கிணறு வெட்டும் பணியை மேற்கொள்ளுவதற்கும் மிகப் பெரிய அளவில் வேலைகள் நடைபெற்று வருகின்றன. உதாரணமாக, மெக்ரெலியின் வெந்நீர் ஊற்றைப் பயன்படுத்தி, அப்பிரதேசத்திலுள்ள வீடுகளுக்கு இதற்குள்ளாகவே கணப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எண்ணெய் ஊற்றுகள்

கதிரியக்கப் பொருளைக் கொண்டு கண்டுபிடிக்கப்படுகிறதாம்

உஸ்பெக்கிஸ்தானிலுள்ள 'போஸ்டன்' எண்ணெய் சேமிப்புக் களத்தில், சுமார் 1½ மைல் ஆழமுடைய போரிங் குழாய் வழியாகப் பூமியின் கீழிருந்து எண்ணெய், ஊற்றாகப் பிரவாகமெடுத்துப் பாய்கிறதாம்!

கதிரியக்கமுடைய பொருட்களைப் பயன்படுத்தித்தான் இந்த எண்ணெய் ஊற்று கண்டுபிடிக்கப்பட்டதாம்!

உஸ்பெக்கிஸ்தானிலுள்ள மற்றொரு எண்ணெய் சேமிப்புக் களத்திலும் இதே முறை கையாளப்பட்டு நான்கு மிகப் பெரிய எண்ணெய் ஊற்றுக்களும், வாயு ஊற்றுக்களும் கண்டுபிடிக்கப்பட்டதாகச் செய்தி தரப்பட்டுள்ளது.

வெப்பத்தின் கொடுமை

கட்டுப்படுத்திக் கையாளுவதற்கு நூதனச் சாதனம்!

தட்பவெட்ப நிலை 30 டிகிரி செண்டிகிரேடுக்கு அதிகமாகவுள்ள போது, பஸ்களில் பிரயாணம் செய்பவர்கள் வெப்பத்தின் கொடுமையால் பெரிதும் அவதியுறுகின்றனர் அல்லவா? இனிமேல் இந்தத் தொல்லையே இருக்காது; பெருமழை பெய்தாலும், கடும் வெய்யில் காய்ந்தாலும், எல்லா நிலைமைகளிலும் 17 டிகிரி செண்டிகிரேடுக்கு மேல், பஸ்களிலும் கார்களிலும் தட்பவெட்ப நிலை அதிகரிக்காமல் இருப்பதற்கு இப்பொழுது தக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

பஸ்களிலோ, கார்களிலோ அல்லது லாரி டிரைவர் உட்காரும் இடத்திலோ, நாம் விரும்பும் தட்பவெட்ப நிலையை உண்டாக்கிக் கொள்வதற்கான வகையில் 'அரை வாசி—மின் கடத்தி சாதனம்,' ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஒரு பொத்தானை அழுத்தினால் போதும்—நாம் விரும்பும் அளவுக்கு தட்பவெட்ப நிலையை அடக்கி ஆள முடியும்!

அணுசக்தி மூலம் ஆற்றல்மிகு வேலைகள்

சோவியத் ரஷ்யாவில் போக்கு-வரத்திற்கு அணுசக்தி இயந்திர சாதனங்களை உற்பத்தி செய்வதற்கு விரிவான அளவில் வேலை நடைபெற்றுவருகிறதாம்.

அண்டார்க்டிக் கடலில் பிரயாணம் செய்வதற்கான பனிக்கட்டி உடைக்கும் அணுசக்திக் கப்பல்களைக் கட்டுவதற்கான திட்டத்தை விஞ்ஞானிகளும் எஞ்சினீயர்களும் ஏற்கனவே தயாரித்து விட்டார்கள். திமிங்கல வேட்டைக்காக, அணுசக்தியால் இயங்கும் எஞ்சின்களையுடைய கப்பல்களைத் தயாரிப்பதற்குத் திட்டம் புனையப்பட்டு வருகிறது. இக்கப்பல்கள் சாதாரணக் கப்பல்களைவிட அதிக வேகத்தில் செல்லக்கூடியவையாக இருக்கும். மேலும் இவை, எரிபொருளின் உதவியின்றி நீண்ட நேரம் செல்லக்கூடியவையாக இருக்கும்.

இரயில்வே போக்கு-வரத்திலும் அணுசக்தி உபயோகிக்கப்படவிருக்கிறது. அணுசக்தியால் இயங்கும் இரயில்வே எஞ்சின்களை உருவாக்குவது சம்பந்தமாகவும் யோசிக்கப்பட்டு வருகிறது.

இதேபோல், அணுசக்தி மோட்டார்களையுடைய விமானங்களும் கூடிய சீக்கிரத்தில் உற்பத்தி செய்யப்படும். இது மட்டுமல்லாமல் இடம் பெயர்ந்து செல்லக்கூடிய அணுசக்தி மின்சார நிலையங்களை உற்பத்தி செய்வதற்கும் திட்டமிடப்பட்டு வருகிறது.

இந்நிலையங்கள், மோட்டார் கார்களிலும் டிராக்டர்களிலும், விசேட இரயில்வே வாகன்களிலும் பொருத்தப்படுமாம்!

33 புதிய ரகக் கோதுமைப் பயிர்கள்

ரஷ்யாவில் உருவாக்கப்பட்டது!

சமீபத்தில் சோவியத் தாவர வகை விஞ்ஞானிகள் உருவாக்கிய 33 புதிய ரகக் கோதுமைப் பயிர்கள், 1955—56-ல், சோவியத் யூனியன் முழுமையிலுமுள்ள கூட்டுப் பண்ணைகளிலும், அரசாங்கப் பண்ணைகளிலும் வேளாண்மை செய்யப்பட்டுள்ளனவாம்.

வடக்கு காகசஸில், 'தாடியில்லா' கோதுமையையும், 'பிஞ்சில் முற்றும்' கோதுமையையும் புதிதாகப் பயிரிடத் தொடங்கியுள்ளனர். இவ்விரு புதிய ரகக் கோதுமையும் குளிர்காலப் பயிர்கள். விவசாயத்திற்கு இவை பெரும் முக்கியத்துவம் வாய்ந்தவை. இதற்கு முன்பு 2½ ஏகர் நிலத்திற்கு 3 டன்னுக்குக் கூடுதலான கோதுமை கண்டுமுதலாயிற்று என்றால், இப்பொழுது இப்புதிய ரகக் கோதுமை பரீட்சார்த்தமாக வேளாண்மை செய்து பார்க்கப்பட்டதில் 6·02 டன்வரை கண்டுமுதலை ஈன்றுள்ளதாம்.

அதிகவேகத்தில் இயங்கும் புகைப்பட-தந்திக் கருவி

யுக்ரைனிலுள்ள ஒடெஸ்ஸா மின்சார-தொழில் நுட்பக் கழகத்தைச் சேர்ந்த இளம் நிபுணர்கள் சிலர், அதிவேகத்தில் இயங்கும் புகைப்பட-தந்திக் கருவி ஒன்றை உருவாக்கியுள்ளனர்.

டெலிவிஷன் பெட்டியில்விழும் பிம்பத்தைப்போலவே இப்படத் தந்தியிலும் பிம்பம் விழுகிறது. மின் அணுக்கதிரின் மூலம் புகைப்படம் பதிவாகிறது.

பழைய புகைப்படத்-தந்தி சாதனங்களைவிட, இப்புதிய கருவி நான்கு, ஐந்து மடங்கு கூடுதலான வேகத்தில் இயங்குகிறது என்பதும், இப்பொழுதுள்ள தந்திக் கம்பிகளின் மார்க்கமாகவே மின் அணுக் கதிர்மூலம் புகைப்படங்களை அனுப்பி வைக்கலாம் என்றும் கூறப்பட்டுள்ளது.

சூரியக் கதிர் அடுப்பு

மூன்று வகை உணவுகளைத் தயாரிக்கும் எளிய சாதனம்

"ரஷ்ய விஞ்ஞானப் பேரவையின்கீழ், டாஷ்கண்டு நகரில் 'பரீட்சார்த்த'மாக அமைக்கப்பெற்றுள்ள சூரிய வெப்ப ஆராய்ச்சி நிலையத்தில், பல்வேறு வகையான சூரியக் கதிர் நிலையங்கள் உருவாக்கப்பட்டு சோதிக்கப்பட்டுள்ளன.

"சூரிய வெப்பத்தைக் கொண்டு மிகவும் சீக்கிரமாக மூன்று சாப்பாடு வகைகளைத் தயாரிக்கவல்ல சூரியக் கதிர் அடுப்பு ஒன்று எளிய முறையில் உருவாக்கப்பெற்றுள்ளது. சகல வழிகளிலும் மிகவும் எளிதானதாக அமைந்துள்ள இந்த அடுப்பு பரிசோதிக்கப்பட்டு, பெருமளவு உற்பத்திக்கு உகந்தது என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது; இதனால் இத்தகைய அடுப்புகளை தொழிற்சாலைகள் கூடிய சீக்கிரத்தில் பெருமளவில் உற்பத்தி செய்து குவிக்கும்; இதேபோல் சூரியக்கதிர் கொதிகலனும், சூரிய வெப்பத்தைக்கொண்டு வெந்நீர் தயாரிக்கும் சாதனமும் சோதிக்கப்பட்டு, மக்கள் உபயோகத்திற்காகப் பெருமளவில் உற்பத்தி செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது" என்று 'டாஸ்' செய்தி ஒன்று கூறுகிறது.

மூங்கில் தொழிலில் நவீன முறைகள்

கற்றுத் தருவதற்கு மதுரையில் பயிற்சி நிலையம் ஏற்படும்

மூங்கிலைக் கொண்டு சாமான்கள் செய்வதில் ஜப்பானில் மேற்கொள்ளப்படும் நவீன முறைகளையும், டேராடூனில் வனப் பொருள் ஆராய்ச்சி நிலையத்தில் உருவாக்கப்பட்ட புதிய முறைகளையும் மதுரை நகரிலும், மலபார் மாவட்டத்திலுள்ள கோலயாட்டிலும் கற்றுத் தருவதற்கான பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தப்படுமாம்.

★★★★★★-★★★★★★★★-★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★ ★★★

தலைமை நிலையச் செய்தி :

தேர்தல் ஆய்வுக் குழுச் சுற்றுப்பயணம்

★

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும் தேர்தல் ஆய்வுக்குழு உறுப்பினர்களான தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன் ஆகியோரும் அக்டோபர் திங்கள் 12-ம் நாளிலிருந்து 23-ம் நாள்வரை கீழ்க்கண்ட தமிழகத்தின் குறிப்பிட்ட இடங்களுக்கு மட்டுமே சென்று தங்கியிருந்து, அந்த இடங்களைச் சுற்றியுள்ள தொகுதிகளைச் சார்ந்த கழகத் தோழர்களையும், கழக ஆதரவாளர்களையும் சந்தித்துப் போதுத்தேர்தல் சூழ்நிலை குறித்து விவரம் அறிவார்கள்.

ஆய்வுக் குழு செல்லும் இடங்கள்:

அக்டோபர்			அக்டோபர்		
12 :	காஞ்சிபுரம்	.... காலை 9 மணி	18 :	மதுரை	.... காலை 9 மணி
,,	வேலூர்	.... மாலை 6 ,,	,,	விருதுநகர்	.... மாலை 6 ,,
13 :	திருப்பத்தூர்	.... காலை 9 ,,	19 :	திருநெல்வேலி	.... காலை 9 ,,
,,	கிருஷ்ணகிரி	.... மாலை 6 ,,	,,	நாகர்கோவில்	.... மாலை 6 ,,
14 :	சேலம்	.... காலை 9 ,,	20 :	ஓய்வு	
,,	ஈரோடு	.... மாலை 6 ,,	21 :	காரைக்குடி	.... மாலை 6 ,,
15 :	கோயமுத்தூர்	.... காலை 9 ,,	22 :	பட்டுக்கோட்டை	.... காலை 9 ,,
,,	உடுமலைப்பேட்டை	.... மாலை 6 ,,	,,	மாயவரம்	.... மாலை 6 ,,
16 :	கரூர்	.... காலை 9 ,,	23 :	கடலூர்	.... காலை 9 ,,
,,	திருச்சி	.... மாலை 6 ,,			
17 :	திண்டுக்கல்	.... காலை 9 ,,			
,,	பெரியகுளம்	.... மாலை 6 ,,			

23—10—56 அன்று இரவு சென்னை வந்து சேருவார்கள்

தேர்தல் சூழ்நிலை குறித்து விவரம் தெரிவிக்கக்கூடிய அந்தந்த தொகுதியிலுள்ள கிளைக் கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும், அன்புகூர்ந்து அந்தந்த மாவட்டச் செயலாளர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

குறிப்பு :—தேர்தல் ஆய்வுக்குழு, திட்டமிட்டுள்ளபடி செல்லுமிடங்களில் தொடர்ந்து தன் பணியில் மிகுந்த கவனம் செலுத்தவேண்டியிருப்பதால், எந்த இடத்திலும் எக்காரணங்கொண்டும் பொதுக்கூட்டங்களோ, வேறு பொது நிகழ்ச்சிகளோ ஏற்பாடு செய்ய வேண்டாமென்று கிளைக் கழகத் தோழர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

'அறிவகம்' சென்னை
23—9—56

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

★★★★★★★★★★★★★★★★★★-★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

ரஷ்யாவின் வர்த்தகம் பெருகுகிறதாம்!

60 நாடுகளின் தொடர்பு

1955-ம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களைவிட இவ்வாண்டின் முதல் ஆறு மாதங்களில் வெளி நாடுகளுடன் ரஷ்யா நடத்தி வரும் வர்த்தகம் 6 சதவிகிதம் அதிகரித்துள்ளதாகத் தெரியவருகிறது.

இப்பொழுது ரஷ்யா 60-க்கு மேற்பட்ட நாடுகளுடன் வர்த்தகம் புரிந்து வருகிறது. கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடன் மாத்திரமின்றி, மேற்கு ஐரோப்பா, தென்கிழக்கு ஆசியா, சமீபக் கிழக்கு-ஆசியாவைச் சேர்ந்த பல நாடுகளுடனும் வர்த்தகப் பண்டங்களின் பரிவர்த்தனையை வெகுவாக அதிகரித்துள்ளதாம்.

உதாரணமாக இந்தியா, பர்மா, சிரியா, லெபனன், யேமன்—இந்நாடுகளுடன் முதல் தடவையாக வர்த்தக உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றும் இயந்திரக் கருவிகள், மோட்டார் வண்டிகள், பண்ணைக் கருவிகள், மரம், எண்ணெய், நிலக்கரி, தானியம், கம்பளி முதலிய பல்வேறு பொருள்கள் ரஷ்யாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன என்றும் இவையன்றி, தொழிற்சாலைகள், சுரங்கங்கள், மின்சார நிலையங்களுக்கான பூரா சாதனங்களையும் தளவாடங்களையும் ரஷ்யா பிற நாடுகளுக்கு வழங்கி வருகிறது என்றும் கூறப்படுகிறது.

உலக வானிலையைக் கட்டுப்படுத்துவார்களாம்!

பத்துமுதல் இருபது ஆண்டுகளில் விஞ்ஞானிகள் உலக வானிலையைக் கட்டுப்படுத்தக்கூடிய நிலைமையிலிருப்பார்களாம்!

தேர்தல் நிதி

சேலம் மாவட்ட தி. மு. கழகச் சார்பில் நடைபெற்றப் பொதுக் கூட்டத்தில் தேர்தல் நிதிக்கென வசூலிக்கப்பட்ட ரூ. 27—12—0 அனுப்பப்பட்டது.

• • •

சென்னை — இராயப்பேட்டை குறள்நெறி நாடக மன்றச் சார்பில் நடைபெற்ற 'தேவாலயம்' நாடகத்தையொட்டித் தேர்தல் நிதிக்கென ரூ. 25 தரப்பட்டது.

• • •

செட்டியூர் சின்னக்கம்மாம்பட்டு தோழர் சி. எஸ் கண்ணன் அவர்களால் ரூ. 1—10—0 தேர்தல் நிதிக்கென அனுப்பப்பட்டது.

பிறப்பு

23—9—56 இரவு 8 மணிக்கு அம்மன்புரம் தி மு. கழகத் தோழர் மா. கணபதி அவர்களின் தமக்கை தோழியர் வீரமணி நவினர் ஓர் ஆண் மகவுக்குத் தாயானார்; இதன் நினைவாக நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

• • •

புதுவை தி. மு. கழகத் தோழர் சி. அரங்கமன்னன் அவர்கள் துணைவியார் தோழியர் மணி.அம்மையார் ஒரு பெண் மகவுக்குத் தாயானார்; இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

திருமணம்

23—9—56 காலை 8 மணிக்கு சென்னை-வண்ணை சோலையப்பன் தெரு, எண். 121 இல்லத்தில், தோழர் கே. எம். கண்ணபிரான் தலைமையில் தோழர் சேனி — தோழியர் குப்பம்மாள் திருமணம் நடைபெற்றது. தோழர்கள் வேணு, மதிவாணன், சடையப்பன், பொளூர் - சுப்பிரமணியம், தோழியர் அலமேலு அப்பாதுரை ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இத்திருமண நினைவாக 'நம் நாடு' இதழுக்கு ரூ 1 நன்கொடை தரப்பட்டது—வரப்பெற்றோம் - நன்றி —பொறுப்பாளர்.

காங்கிரஸ் ஊழியர்களிடையேயும் ஜாதி வெறி!

காலக் கருத்தை உணராது காலங்கழிக்கும் காங்கிரஸ் கட்சியினர்!

அகமதாபாத்தில் நேரு அலசிக் காட்டுகிறார்!

அகமதாபாத், அக் 2—

"ஜாதியமானது, இப்பொழுது சமுதாயத் துறையில் அந்த பொருளாக இருந்துவருகிறது. ஆனல், அரசியல் துறையில் அது பலமாகப் பற்றி இருக்கிறது.

"காங்கிரஸ் ஊழியர்களிடையிலும்கூட ஜாதிப் பிடிப்பு பரவலாக இருக்கிறது. வகுப்புவாதம் தீமையானது என ஏற்றுக்கொண்டிருக்கிறவர்களே, தங்களுடைய முடிவை செயலாற்ருது இருப்பார்களானல், மற்றவர்களைக் குறித்து நாம் எதைச் சொல்ல இருக்கிறது?"

காங்கிரஸ் கட்சியினரின் இன்றைய நிலை குறித்து, இந்தியப் பிரதமர் நேரு இவ்வாறு சித்தரித்துள்ளார்.

"உலகம் மாறுதல் பெற்றிருக்கின்ற அளவிற்குக் காங்கிரஸ் ஊழியர்கள் மாறி இருக்கவில்லை. ஆதலால் கால சிந்தனைக்குத் தொலைவில் ஊழியர் பின்தங்கிக் கிடக்கிருர்கள். எனவே, பொதுமக்கள் அனைவரையும் தன்னுடன் நெருக்கமாக வைத்திருக்க அவர்களுக்கு ஆற்றல் இல்லை. புதிய குரல்கள் கேட்கப்படுகின்றன. ஆனல், அவைகள் அனைத்தும் நலம் பயப்பன அல்ல. புதிய குரலெழுப்புவது எளிது. ஆனல், தேசத்தை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச்செல்ல வேண்டும்.

"குசராத் காங்கிரஸ் பலம் பொருந்தியதாகக் கட்டப்பட்டதாகும். குசராத்திலேயே இத்தகு சம்பவம் நிகழ்ந்திருக்கிறது என்ருல், காங்கிரஸ் பலக் குறைவாக இருக்கிற இடத்தில் என்னதான் ஏற்படாது? என் நமக்கும் மக்களுக்கும் இடையில் திடீரென இத்தகைய தடுப்புச் சுவர் ஏற்பட்டு இருக்கிறது? இது திடீரென்று ஏற்பட்டதல்ல."

இவ்வாறு, பிரதமர் நேரு அவர்கள் அகமதாபாத் காங்கிரஸ் ஊழியர்களிடை பேசும்பொழுது குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசும்பொழுது, தேர்தலில் வாக்களிக்கக்கூடாது என சர்வ சேவா சங்கம் கருத்து அறிவித்திருப்பதைக் குறித்துக் கேட்கப்பட்ட கேள்விக்கு பின்வருமாறு பதில் கூறினர்:—

"நான் அக்கருத்து பற்றிக் கேள்விப்படவில்லை. ஆனல், அவ்வாலோசனை சரியானது என எனக்குப் படவில்லை. வாக்களிக்காமல் இருப்பது என்பது, ஒரு குடிமகனுக இருந்து ஆறறவேண்டிய கடமையிலிருந்து குடிமக்கள் தவறிவிடுகிருர்கள் என்றுதான் அதற்குப் பொருள்."

1970-ம் ஆண்டிற்குள்

உலகமெங்கணும் அணு சக்திக் கப்பல்கள்கூட ஓடுமாம்!

சான்பிரான்சிஸ்கோ—

உலகத்தில் கப்பல் கட்டும் துறைகளெல்லாம் 1970-க்குள் பெரும்பாலான கப்பல்களில் அணு எஞ்சின்களைப் பொருத்தலாம் என்று அணு சக்திக் கப்பல் நிபுணர் ஒருவர் கூறுகிருர்.

அணு சக்தி இயக்கம் முதல் கப்பல் 1859-க்குள் அமெரிக்காவில் ஓடலாம் என்றும் அவர் சொல்கிருர்.

உழைக்காமலே

கிட்டிய வருமானம்

திருமலை, திருப்பதியில் உள்ள எழுமலையானுக்கு செப்டம்பர் மாத வருமானத்தின் மதிப்பு ரூ 1,45,858—5—0 என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டத்தில்

திராவிட முன்னேற்றக் கழகத்

தேர்தல் ஆய்வுக் குழு

"மதுரை மாவட்டத்தில் கீழ்க்கண்ட விபரப்படி தேர்தல் ஆய்வுக் குழுக் கூட்டம் நடைபெறும்:—

"திண்டுக்கல், பழனி, ஒட்டன் சத்திரம், வேடசந்தூர், வட மதுரை, ஆத்தூர் தொகுதிகளுக்கு 17—10—56 காலை 9-மணிக்கு —திண்டுக்கல்லிலும்;

"பெரியகுளம், தேனி, கம்பம், போடிநாய்க்கனூர் தொகுதிகளுக்கு 17-10-56 மாலை 6-மணிக்கு — பெரியகுளத்திலும்;

"மதுரை, மேலூர், நிலக்கோட்டை, உசிலம்பட்டி, திருமங்கலம் தொகுதிகளுக்கு 18-10-56 காலை 9-மணிக்கு —மதுரையிலும் நடைபெறும்.

"கிளைக்கழகச் செயலாளர்களும், மாவட்டப் பிரதிநிதிகளும், கழக ஆர்வங்கொண்ட பிரமுகர்களும் தவருது வந்திருந்து தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுகிறேன்,"

—என்று மதுரை மாவட்டச் செயலாளர் தோழர் எஸ், முத்து அவர்கள் அறிவிக்கிருர்.

தொழிலாளர் சங்கத் தலைவரின் பரிதாப மரணம்

சேலம், அக். 4—

அ.இ. தொழிற் சங்கக் காங்கிரஸ் ஆதிக்கத்திலிருந்து மாக்னிசைட் தொழிலாளர் சங்கத்தில் இருந்து விலகி, ஐ. என். டி. யூ. சி. ஆதிக்கத்திலுள்ள மாக்னிசைட் தேசியத் தொழிலாளர் சங்கத்தில் சேர்ந்தத் தலைவராகயிருந்த சின்னப் பெருமான், சனிக்வுண்டனூர் என்னும் கிராமத்தில் சென்ற 2-ந் தேதி இரவு தூங்கிக்கொண்டிருக்கையில கொடிய முறையில் தாக்கப்பட்டதாகவும், அவருடைய கால்கள் வெட்டப்பட்டதாகவும், வைத்திய விடுதிக்கு எடுத்துச்செல்லப்பட்ட அவர் நேற்று இறந்தார் என்றும் கூறப்படுகிறது.

சென்னை 18-வது வட்ட தி.மு.க. செயற் குழு உறுப்பினர்களுக்கு:

14—10—56 காலை 9 மணியளவில், கிளைக் கழக இல்லத்தில் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். கிளைக் கழக 6-வது ஆண்டு விழா வரவு-செலவு, கழக ஆக்க வேலைகள் ஆகியவை ஆய்வுக்கெடுத்துக்கொள்ளப்படும்.

சென்னை 47-வது வட்ட தி. மு. க. செயற் குழு உறுப்பினர்களுக்கு

6—10—56 இரவு $8\frac{1}{2}$ மணிக்கு வசதாப்பேட்டை கிருஷ்ணசாமி பிள்ளை தோட்டம் எண் 18 கழக இல்லத்தில் கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும்.

பம்பாய் தி. மு. கழக மத்தியக் குழு கூட்டம்

தேர்தல் நிதி வசூல்

"பம்பாய் திராவிட முன்னேற்றக் கழக மத்தியக் குழுக் கூட்டம், 7—10—56 மாலை 6 மணிக்கு, தாராவி—'திராவிடரகத்'தில் நடைபெறும்.

"தேர்தல் நிதி பிரித்தனுப்புவது குறித்து முடிவு செய்யப்பட வேண்டியுள்ளமையால், கிளைச் செயலாளர்களும் மத்தியக் குழு உறுப்பினர்களும் தவருது அக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன்,"

என்று, மத்தியக் குழுச் செயலாளர் எஸ் தியாகராசன் அவர்கள் அறிவிக்கிருர்

பெங்களூர் மாவட்ட

தி.மு.க. பிரதிநிதிகள் கூட்டம்

"7—10—56 பிற்பகல் 4 மணிக்கு, அக்கிப்பேட்டை தி. மு. கழக அலுவலகத்தில், மேற்படி கூட்டம் நடைபெறும்.

"பெங்களூர் நகராண்மைக் கழகத் தேர்தலில் தி. மு. கழக ஆதரவில் நிற்க விரும்பும் கழக உறுப்பினர்களுக்கு எந்த முறையில் ஆதரவு கொடுக்க வேண்டும் என்ற பிரச்சினையை ஆராய வேண்டியிருப்பதால் எல்லா கிளைக் கழகச் செயலாளர்களும், மாவட்டப் பிரதிநிதிகளும் தவருது கலந்து கொள்ளுமாறு கோருகிறேன்,"

என்று, தோழர் எஸ். வி. பதி அவர்கள் அறிவிக்கிருர்.

சொற்பயிற்சிக் கூட்டங்கள்

பெங்களூர் — அலசூர் அறிவு வளர்ச்சி மன்றத்தில், இத்திங்கள் 6, 7, 10, 13, 14 ஆகிய ஐந்து நாட்களிலும் முறையே 'காந்தியின் நற்செயல்கள்', 'மூட நம்பிக்கை', 'மக்கள் உரிமை', 'தமிழ் இன்பம்', 'அறிவு வளர்ச்சி' எனும் தலைப்புகளில் தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

6—10—56 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு, சென்னை — முத்தியாலுபேட்டை எண் 17, சாலைவிநாயகர் கோயில் தெரு, முத்தமிழ் மன்றப் பணிமனையில் தோழர் து. தமிழ்ச் செல்வன் தலைமையில், 'சட்டமும் சம்பிரதாயமும்' எனுந்தலைப்பில் தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

7—10—56 காலை 10 மணிக்கு, பைராக்குஜன் பகதூர் தெரு பகுத்தறிவுப் பாசறையில் தோழர் பா. சீதாராமன் தலைமையில், 'மறுமலர்ச்சி' எனும் தலைப்பில் தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றுவர்.

மேற்குக் கம்யூனிஸ்டு நாடுகள்

டிட்டோ கம்யூனிஸ்டு கட்சியுடன் தொடர்புகொள்ளும்

பாரிஸ், அக். 4—

பிரெஞ்சு கம்யூனிஸ்டு தூதுவர்கள், யூகோஸ்லேவியா சென்று டிட்டோ கம்யூனிஸ்டு கட்சியுடன் நெருங்கிய தொடர்பை உண்டாக்குவதற்கு முயற்சி செய்து வருவதாக 'பிரான்ஸ் சாயர்' என்னும் தினசரி தெரிவித்துள்ளது.

இந்தத் தூதுவின் நோக்கமே மேற்கு கம்யூனிஸ்டு நாடுகளுக்கும் டிட்டோ கம்யூனிஸ்டு கட்சிக்கும் ஒற்றுமையையும் — தொடர்பையும் உண்டாக்குவதற்கே என்றும் கூறப்பட்டுள்ளது.

இரயில் நிறுத்தம்: அக். 15?

(4-ம் பக்கம் பார்க்க)

டாரத்துடன் தொடர்பு கொண்ட காங்கிரஸ்காரர் கூறுவதில் உண்மை இருக்கக்கூடும் என்று தெரிகிறது.

ம. பொ. சி.-யின் கிளர்ச்சியை எதிர்ப்பதைவிட, அதைத் தூக்கி அடிக்கக்கூடிய விறுவிறுப்பான ஒரு போராட்டத்தைத் துவக்கிப் பெரியார் நடத்திக் காட்டுவார் என்றும் பேசிக்கொள்ளப்படுகிறது.

அக்டோபர் அறப்போர் எந்த விதமாக இருக்கும் என்பது பற்றிய 'யூகங்கள்' பல கிளம்பிவிட்டன.

1. கோர்ட்டுகள் — மத்திய சர்க்கார் ஆபீசுகள் முன் மறியல் நடத்துவது.
2. புதிய ராஜ்ய அமைப்புத் திட்டக் கொடும்பாவி கொளுத்துவது.
3. காமராசர் இல்லத்தில் மறியல்.

இவ்விதமாக 'அறப்போர்' உருவாகலாம் என்று தொண்டர்கள் பேசிக்கொள்கின்றனர்

'இந்த முறைகள் எல்லாம் கிடையாது. மாநில சர்க்காரும், மத்திய சர்க்காரும், நிலைமையை உணருவதற்கேற்ற வழி—டில்லியைத் திடுக்கிடச் செய்யக்கூடிய வழி—இரயில் நிறுத்தம் ஒன்றுதான் என்ற கருத்துக்குத்தான் இப்போது தொண்டர்கள் வட்டாரத்தில் அதிகமான செல்வாக்கு இருந்து வருகிறது.

தொண்டர்களின் கருத்துக்கு மதிப்பளித்து ம பொ. சி. அக்டோபர் 15-ல் தமிழ் மாநிலமெங்கும் இரயில் நிறுத்தப் போர் நடத்துவது என்று முடிவு செய்வார் என்று பெரிதும் நம்பப்படுகிறது.

தோழர்கள் ம. பொ. சி.-யும் விநாயகம் எம். எல். ஏ.-யும், தொண்டர்களைக் கலந்துபேசத் தமிழகமெங்கும் சுற்றுப்பயணம் செய்ய இருக்கிருர்கள். அதுபோது தொண்டர்கள், அக்டோபர் அறப்போர் இரயில் நிறுத்தமாக இருக்க வேண்டும் என்பதைத்தான் வலியுறுத்தப் போகிருர்கள் என்று நம்பகமான இடத்திலிருந்து 'சேதி' கிடைத்திருக்கிறது.

கழகக் கூட்டம்

★

கல்லுக்குழி:
சேதுராமப்பிள்ளை காலனிக்கு அருகில்
(லோகோ ஷெட் சமீபம்)
7—10—56 மாலை 5 மணிக்கு
தலைவர்: வளவன்
பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத்
அன்பில்-தர்மலிங்கம்
எம் எஸ். மணி

★

மேட்டூர் அணை:
சேலம் சேம்ப் கமலப் பள்ளித் திடல்
8—10—56 மாலை 6 மணிக்கு
தலைவர்: அ. பாலு
பேசுவோர்:
டி கே. சீனிவாசன்
சிற்றுளி-சுப்பிரமணியம்
க. கு. சின்னசாமி

★

காஞ்சீபுரம்:
இரங்கசாமிகுளம் அருகில்
(மறுமலர்ச்சிக் கழகம் உட் கிளை)
7—10—56 மாலை 6 மணிக்கு
தலைவர்: காஞ்சி-கல்யாணசுந்தரம்
பேசுபவர்:
மு. கருணநிதி

★

பொன்மலைப்பட்டி:
வ. உ. சி. திடலில்
10—10—56 மாலை 6 மணிக்கு
தலைவர்: அ. பொன்னம்பலனர்
பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத்
எம். எஸ். மணி

வட ஆற்காடு மாவட்டத்தில்

தி. மு. கழகத் தேர்தல் ஆய்வுக் குழு

'வட ஆற்காடு மாவட்டத்தில் 12—10—56 மாலை 6 மணிக்கு, வேலூர் 'டவுன் ஹாலி'லும், 13—10—56 காலை 9 மணிக்கு, திருப்பத்தூர் சின்னக்கடைத் தெரு எண் 58 இல்லத்திலும் தேர்தல் ஆய்வுக் குழுக் கூட்டம் நடைபெறும். கிளைக் கழகச் செயலாளர்களும், மாவட்டப் பிரதிநிதிகளும், கழகப் பிரமுகர்களும் கலந்து கொண்டு தங்கள் கருத்தை அறிவிக்கக் கோருகிறேன்," என்று வ. ஆ. மாவட்டச் செயலாளர் தோழர் முல்லை சத்தி அவர்கள் அறிவிக்கிருர்.

தமிழ் ஆட்சிமொழி மாநாடு

7—10—56 காலை 8 மணி முதல், திருச்சி, குளித்தலை உயர்நிலைப்பள்ளி கரிகாற்சோழன் காவணத்தில், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தலைமையில் தமிழ் ஆட்சி மொழி மாநாடு நடைபெறும். திரு. சுத்தானந்தபாரதியார் மாநாட்டைத் திறந்து வைப்பார். தமிழ்க் கொடி உயர்த்தப்படும்; ஓவியக் காட்சி திறக்கப்படும். திரு. சுசபதி எம்.எல்.சி., மே. சி சிதம்பரனர், மா. இராசமாணிக்கனர், பா. நடராசன், சி இலக்குவனர், கி இராமலிங்கர், ப. ஜீவானந்தம் எம் எல் ஏ., அ. இரத்தினசபாபதி, ப. சோதி முத்து; ஞா. தேவநேயப்பாவாணர், குன்றக்குடி அடிகளார் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். நாடக நிகழ்ச்சியும், இசை நிகழ்ச்சியும் நடைபெறும்.

விருதுநகர் செந்திக்குமார நாடார் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

7—10—56 மாலை $4\frac{1}{2}$ மணிக்கு, கல்லூரிக் கட்டிடத்தில், திரு. தி. மாணிக்கவாசகம் தலைமையில், மேற்படி சங்கச் சார்பில் ஓர் சிறப்புக் கூட்டம் நடைபெறும்; திரு. கே எம். பாலசுப்பிரமணியம் பேசுவார்.

சென்னை—ரூளை நகர இளைஞர் கழகம்

6—10—56 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு மாணிக்கச் செட்டித் தெரு எண் 10 இல்லத்தில் திரு டி. பாலசுந்தரனர் தலைமையில் திரு. டாக்டர் சேசலு அவர்கள் சுகாதார வாரத்தைத் துவக்கிவைப்பார். தோழர் என் பி. எஸ். சப்பர்தம், க. தங்கவேலனர் பேசுவர்.

திருமணம்

7—10—56 காலை 8-30 மணியளவில், சென்னை—தங்கசாலைத் தெரு, எண் 330 (கோவிந்த பவனம்) திருமண மண்டபத்தில், தோழியர் சத்தியவாணி-முத்து தலைமையில், தோழர் எம். எஸ். சசேந்திரன்—தோழியர் ராணி திருமணம் நடைபெறும்; தோழர்கள் மு. கருணநிதி, சி. வி. ஆடலழகன், ஏ எஸ். வேணு ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.